# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2143 - 2019 සැප්තැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2019.09.27

*2143 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1636 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1635- B81564 - 5,403 (2019/09)

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**அறிவித்தல்**

**மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2016 (2019) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியினைத் திருத்தம் செய்தல்**

மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பான 2,141 ஆம் இலக்க அறிவித்தல் 2019.09.12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் மாகாண சபைப் பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வறிவித்தலின் அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2019.09.27 என குறிப்பிடப்பட்டிருப்பினும் அத்திகதி 2019.10.04 ஆந் திகதி என திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் குறிப்பிட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் "2019.09.27" என குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இடங்களும் "2019.10.04" ஆந் திகதி என திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதுடன் ஏனைய விடயங்களில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ் ஆட்சேர்ப்பு தொடர்பான மேலதிக விபரங்கள் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம். ஜீ. ஏ. திலகரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு
மத்திய மாகாண சபை

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி.
2019, செத்தெம்பர் 26.

09-1011

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.